

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.7.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் தமிழ்நாட்டிலுள்ள 25 மாநகராட்சிகள் 144 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மாநகராட்சி ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருமதி துர்கா ஸ்டாலினின்

# ‘அவரும் நானும்’ பாகம் - 2’ நூல் வெளியீட்டு விழா!

**சுப்ரியா சுலே எம்.பி. இன்று வெளியிடுகிறார்! முதல் நூலை எழுத்தாளர் சிவசங்கரி பெறுகிறார்!**

**சென்னை, ஜுலை.19-**

**முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் துணைவியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களின் ‘அவரும் நானும்’ பாகம் - 2 நூல் வெளியீட்டு விழா உயிர்மை பதிப்பகம் சார்பில் இன்று (19-7-2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை- கோட்டூர்புரம்- அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறுகிறது.**

இவ்விழாவில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., வரவேற்புரையாற்றுகிறார்.

கவிஞர் மனுஷ்ய புத்திரன், பதிப்பாளர் உரையாற்றுகிறார். பத்திரிகையாளர் திருமதி. லோகநாயகி, நூல் அறிமுக உரையாற்று கிறார்.

இந்நூலை தேசியவாத காங்கிரஸ் கட்சியின் (எஸ்.பி.,) செயல் தலைவரும், அக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவருமான திருமதி. சுப்ரியா சுலே எம்.பி. வெளியிடுகிறார்.

முதல் நூலை எழுத்தாளர் திருமதி. சிவசங்கரி பெறுகிறார்.

இவ்விழாவில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய மேல் முறையீட்டு ஆணையத் தலைவரும் - மேனாள் நீதியரசருமான திருமதி பவானி சுப்பராயன், ‘டாபே’ குழுமம் நிர்வாக இயக்குனர் - தலைவர் திருமதி. மல்லிகா சீனிவாசன், கோவை சந்திரா - ஜி.ஆர்.ஜி. நிறுவனங்களின் தலைவர் முனைவர் நந்தினி ரங்கசாமி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

விழாவில் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் ஏற்புரையாற்றுகிறார்.

‘உயிர்மை’ இதழின் நிர்வாக ஆசிரியர் செல்வி ராமச்சந்திரன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில், மாலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை கலைமாமணி ராஜேஷ் வைத்யாவின் வீணை இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

# கரூர் மாவட்டத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்கள்!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பார்வையிட்டு நலஉதவிகள் வழங்கல்!

கரூர், ஜுலை19-

கரூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்களை பார்வையிட்டு பயனாளிகளுக்கு, நலத்திட்ட உதவிகளை சட்ட மன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி வழங்கினார்.

கரூர் மாவட்டத்தில், “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்கள் நடைபெற்று வருகிறது. கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி, பார்வையிட்டு 55 பயனாளிகளுக்கு ரூ. 16.78 இலட்சம் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அப்போது செய்தியாளர்களிடம் செந்தில் பாலாஜி கூறியதாவது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் “உங்களுடன் ஸ்டாலின்” எனும் மகத்தான திட்டத்தை அறிவித்து அவர்களின் பொற்கரங்களால் தொடங்கி வைத்து, கரூர் மாவட்டத்தில் மட்டும் 179 இடங்களில் முகாம்கள் நடைபெற்று வருகின்றன. பொதுமக்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே சேவைகளை வழங்கும் விதமாக நகரப் பகுதிகளில் 13 துறைகளைச் சேர்ந்த 43 சேவைகளும். ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சேர்ந்த 46 சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் அரசு நிர்வாகத்தை தேடி செல்கின்ற நிலையை மாற்றி, அரசு நிர்வாகமே மக்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று சேவைகளை வழங்கும் திட்டமாக “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் அமைந்துள்ளது. கரூர் மாவட்டத்தில் 519 தன்னார்வலர்கள் வீடு வீடாகச் சென்று முகாம், பங்கேற்கும் துறைகள், வழங்கும் சேவைகள் பற்றியும் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை வழங்கி வருகிறார்கள்.

குறிப்பாக கடந்த 2 தினங்களாக 8 இடங்களில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் 5,067 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் 2,244 மனுக்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கான விண்ணப்பங்களாகும். ஏற்கனவே தமிழ்நாட்டில் 1.15 இலட்சம் மகளிர்களும், கரூர் மாவட்டத்தில் 1.69 இலட்சம் மகளிர்களும் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர். விடுபட்டுள்ள தகுதியுடைய மகளிர் அனைவருக்கும் மாதம் ரூ. 1,000 வழங்குவதற்காக முகாமில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அரசின் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களை வெறும் காகிதமாக கருதாமல் உத்தரவாக மாற்றப்படும்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் கரூர் மாவட்டத்திற்கு ரூ. 3,000 கோடி மதிப்பிலான வளர்ச்சித்திட்டப் பணிகளும் அதற்கான நிதிகளும் ஒதுக்கியுள்ளார்கள். மேலும் கரூர் மாநகராட்சி பகுதிகளுக்கு மட்டும் ரூ.328 கோடியில் சாலை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. “உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பெறப்படும் கோரிக்கை மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வ காணப்படும் என்றார்.

இதனைத் தொடர்ந்து கூட்டுறவுத் துறையின் சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ. 3.72 இலட்சத்தில் கால்நடை பராமரிப்பு கடனுதவிகளும், 5 பயனாளிகளுக்கு ரூ. 3.75 இலட்சம் பயிர்க் கடனுதவிகளும், மாற்றுதிறனாளிகள் நலத்துறையின் சார்பாக 3 பயனாளிகளுக்கு ஊன்றுகோலும், 1 நபருக்கு ரூ. 10,800 மதிப்பீட்டிலான சக்கர நாற்காலியும், 1 நபருக்கு காதொலி கருவியும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பாக 1 பயனாளிக்கு காய்கறி விதைத் தொகுப்பும். 1 பயனாளிக்கு பழச் செடி தொகுப்பும். வேளாண்மைத் துறையின் சார்பாக 1 விவசாயிக்கு விதைத் தளைகளும்,

மின்சாரத் துறையின் சார்பாக 6 நபர்களுக்கு மின் கட்டண இரசீது பெயர் மாற்ற ஆணை. 1 நபருக்கு விகிதப் படிமாற்றத்திற்கான ஆணை, முத்ரா கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 1 நபருக்கு ரூ. 3 இலட்சம் கடனுதவியும், கரூர் நகர கூட்டுறவு வங்கியின் சார்பாக 1 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ரூ. 3.75 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவியும்,. 3 மகளிருக்கு சிறு வணிக கடனாக ரூ. 1.25 இலட்சம் கடனுதவி, 1 நபருக்கு மாற்றுத்திறனாளி கடனுதவியாக ரூ. 50,000ம், வருவாய்த் துறையின் சார்பாக 3 நபர்களுக்கு வருமானச் சான்றிதழ், 2 நபர்களுக்கு முதல் பட்டதாரி சான்றிதழ். 7 நபர்களுக்கு சாதிச் சான்றிதழ், , 1 நபருக்கு வாரிசு சான்றிதழ், 4 நபர்களுக்கு இருப்பிடச் சான்றிதழ்களும், 1 நபருக்கு விதவைச் சான்றிதழ், மாநகராட்சி சார்பாக 1 நபருக்கு சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான இரசீது. 2 நபர்களுக்கு பிறப்புச் சான்றிதழ். தொழிலாளர் நலத் துறையின் சார்பாக சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 2 நபர்களுக்கு ஓய்வூதியத்திற்கான ஆணை (மாதம் ரூ. 1,200) மற்றும் 1 நபருக்கு அமைப்பு சாரா நலவாரிய பதிவு அட்டையும் என மொத்தம் 55 பயனாளிகளுக்கு ரூ. 16.78 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை செந்தில் பாலாஜி வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன். துணை மேயர் ப. சரவணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) பிரகாசம். உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணன். வட்டாட்சியர்கள் குமரேசன், மோகன்ராஜ், மண்டலக்குழு தலைவர் அன்பரசன் கலந்து கொண்டனர்.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.6லட்சம் தீருதவித் தொகை

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம் வாங்கல் ஈ.வி.ஆர் நகரில் வசித்து வந்த மணிவாசகம் என்பவர் கடந்த 13.07.2025 அன்று வன்கொடுமையால் மரணமடைந்தார். அவரது மனைவிக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாக ரூ. 6.இலட்சத்திற்கான தீருதவித் தொகையை செந்தில் பாலாஜி வழங்கினார். மணிவாசகம் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த ஆறுதலையும், இரங்கலையும் தெரிவித்தார்.




# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

**திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.என்.அண்ணாதுரை எம்.பி. அறிவிப்பு!**

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்-நகரம்-பகுதி-பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :-

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 19.07.2025 | தண்டராம்பட்டு மேற்கு ஒன்றியம் | வேப்பூர் செக்கடி | கந்திலி கரிகாலன் மா.பூபதி |
| 2 | | தண்டராம்பட்டு மத்திய ஒன்றியம் | சாத்தனூர் | கந்திலி கரிகாலன் மா.பூபதி |
| 3 | | செங்கம் கிழக்கு ஒன்றியம் | கன்னாங்குறிக்கை | மதன்குமார் கோ.ராதிகா |
| 4 | | செங்கம் மத்திய ஒன்றியம் | பரமனந்தல் | மதன்குமார் கோ.ராதிகா |
| 5 | | செங்கம் மேற்கு ஒன்றியம் | மேல் பள்ளிப்பட்டு | மதன்குமார் கோ.ராதிகா |
| 6 | | ஜவ்வாது மலை தெற்கு ஒன்றியம் | கல்லாத்தூர் | சேலம் சுஜாதா அ.தமிழரசி |
| 7 | | செங்கம் நகரம் | தோக்கவாடி | சேலம் சுஜாதா அ.தமிழரசி |
| 8 | 20.07.2025 | திருவண்ணாமலை கிழக்கு ஒன்றியம் | தண்டரை ஊராட்சி | சேலம் சுஜாதா கோ.ராதிகா |
| 9 | | வேட்டவலம் பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | சேலம் சுஜாதா கோ.ராதிகா |
| 10 | | கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியம் | சாணி பூண்டி | மதன்குமார் அ.தமிழரசி |
| 11 | | கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியம் | ஆவூர் | மதன்குமார் அ.தமிழரசி |
| 12 | | கீழ்பென்னாத்தூர் பேரூர் | பேருந்து நிலையம் | மதன்குமார் அ.தமிழரசி |
| 13 | | துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியம் | சேரியந்தல் | கந்திலி கரிகாலன் வி.ஜான்ஸ்டின் சுவேதா |
| 14 | | துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றியம் | மல்லவாடி | கந்திலி கரிகாலன் வி.ஜான்ஸ்டின் சுவேதா |
| 15 | 21.07.2025 | கலசப்பாக்கம் கிழக்கு ஒன்றியம் | கலசப்பாக்கம் ஊராட்சி | மதன்குமார் கோ.ராதிகா |
| 16 | | கலசப்பாக்கம் மேற்கு ஒன்றியம் | மேல்சோழங்குப்பம் ஊராட்சி | மதன்குமார் கோ.ராதிகா |
| 17 | | புதுப்பாளையம் கிழக்கு ஒன்றியம் | காஞ்சி ஊராட்சி | சேலம் சுஜாதா மோகநாதன் |
| 18 | | புதுப்பாளையம் மேற்கு ஒன்றியம் | காரப்பட்டு ஊராட்சி | சேலம் சுஜாதா மோகநாதன் |
| 19 | | புதுப்பாளையம் பேரூர் | புதுப்பாளையம் பேரூர் | சேலம் சுஜாதா மோகநாதன் |
| 20 | | ஜவ்வாதுமலை வடக்கு ஒன்றியம் | கோவிலூர் ஊராட்சி | மங்கலம் பிரபாகரன் |
| 21 | | போளூர் வடக்கு ஒன்றியம் | படவேடு ஊராட்சி | மங்கலம் பிரபாகரன் |

திருவண்ணாமலை

நாள் : 17.07.2025

கலைஞர் 100 1924 - 2023




# நாமக்கல் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

நாமக்கல், ஜுலை. 18-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமைத் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதைப் பார்வையிட்டு, மனுதாரர்களுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம் சின்ன முதலைப்பட்டி , பொட்டணம் பாச்சல் ஆகிய பகுதிகளில் ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் துவக்க விழா நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, தலைமை தாங்கினார். நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் , கு.பொன்னுசாமி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், ,மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர். என்.ராஜேஸ்குமார் கலந்து கொண்டு ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமைத் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதைப் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு உடனடித் தீர்வாக அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டத்தினை கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் தொடங்கி வைத்துள்ளார். அதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் மக்களின் குறைகளை தீர்க்கும் வகையில், உங்களின் வீட்டிற்கே வந்து, கேட்டறிந்து தீர்வு காணும் “உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**நாமக்கல் மாவட்டத்தில் 238 சிறப்பு முகாம்கள்!**

இத்திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் 238 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இந்த முகாம்களில் நகர்ப்புறபகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகைதரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ சேவைகளை வழங்க மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

அதனடிப்படையில் நாமக்கல் மாநகராட்சி சின்னமுதலைப்பட்டியில் நடைபெறும் முகாமில், முகாம் தொடங்கிய 1 மணி நேரத்தில் ஏறத்தாழ 600க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டுள்ளது. . கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஆய்விற்கு எடுத்து கொள்ளப்படும் என்றார். தொடர்ந்து

மனுக்கள் அளித்த பயனாளிகளுக்கு உடனடி தீர்வாக சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், மருத்துவக் காப்பீட்டு அட்டை ஆகியவற்றினை வழங்கினார்.

இம்முகாமில், மாநகராட்சி ஆணையாளர் க.சிவக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) மா.க.சரவணன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.வடிவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், உதவி ஆணையர் (தொழிலாளர் நல வாரியம்) இந்தியா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.